# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 212 ஆங்கீரச ஆனி 12 ( 26 . 06 1992 ) வெள்ளி


## ★ அமைதித் திட்டம் அறிவித்தும் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு பகுதிகளில் வன்முறைகள்

பாலஸ்தீனியர்களுக்கு உரிமைகளை வழங்கி மேற்கு ஆசியாவில் அமைதி ஏற்படுத்துவதே தமது நோக்கம் என புதிய இஸ்ரேல் பிரதமர் ரபின் அறிவித்துள்ள நிலையில் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வன்முறைகள் நடந்துள்ளன.

காஸாப் பகுதியில் 2 இஸ்ரேலியர்கள் குத்திக்கொல்லப்பட்டதையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்கு கரையோரப்பகுதியில் இஸ்ரேல் இராணுவத்திற்கும் பாலஸ்தீன கெரில்லாக்களுக்கும் இடையே மோதல் நடைபெற்றுள்ளது.

# படையினரின் காவலரணிலிருந்து புலிகள் தாக்கு; 7 படையினர் பலி!

## மட்டக்களப்பு சிங்கபுர முகாமருகே சம்பவம்

மட்டக்களப்பு சிங்கபுர முகாமருகே நேற்று அதிகாலை புலிகள் நடத்திய தாக்குதலில் 7 படையினர் பலியாகினர். புலிகள் இத்தாக்குதலை படையினரின் காவலரணிலிருந்து வெற்றிகரமாக நடத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்று அதிகாலை 5-45 மணியளவில் மட்டக்களப்பு பொலநறுவை எல்லையில் உள்ள சிங்கபுர இராணுவ முகாமிலிருந்து சுமார் 15 படையினர் ஒரு மைல் தொலைவிலுள்ள தமது காவலரணில் காவற் கடமையை மேற்கொள்ள புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தனர்.

இக்காவலரணில் படையினர் பகலில் காவற் கடமையில் இருப்பர் இரவில் வேறு இடங்களில் தங்கியிருப்பது வழக்கம்

வழமைபோல் நேற்று காலை படையினர் இக்காவலரணுக்கு அருகில் வந்தபோது புலிகள் அக்காவலரணிலிருந்தே படையினர் மீது திடீர் தாக்குதலை தொடுத்தனர்.

7 படையினர் ஸ்தலத்தில் பலியாகினர் ஏனையோர் முகாமிற்கே திரும்பியோடினர்.

மோதலின் போது படையினருக்கு உதவ மேலதிக படை

...04 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் வசமான ஆயுதங்கள்

நேற்று சிங்கபுர காவலரு கில் நடைபெற்ற தாக்குதலில் படையினரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள்

- ஜி-3 துப்பாக்கி- 1
- இதன் ரவைக் கூடுகள்- 6
- ரி-56 துப்பாக்கிகள்- 5
- ரவைக் கூடுகள்- 19
- உயர் வலு தொலை தொடர்பு சாதனம்- 1
- நேட்டோ ரவைகள்- 114
- ஐ.எம் ரவைகள்- 731
- ஜே ஆர் குண்டுகள்- 2
- ஏ கே கோல்சர்கள் 6
- தொப்பிகள்- 2
- இராணுவம் பட்டிகள்- 2
- 4 சோடி சப்பாத்துகள்

## பண்டத்தரிப்பு ப. நோ. கூ சங்கம் 2லீ. ம. எண்ணை விநியோகம்

பண்டத்தரிப்பு பல நோ. கூ. சங்கம் தமது பகுதிகளில் உள்ள மக்களுக்கு உலர் உணவு அட்டைக்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணையை விநியோகித்து வருகிறது.

இதேபோல ஏனைய பல நோ. கூ சங்கங்களும் மண்ணெண்ணையை பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன 47

## புலோலி விவசாயிகளுக்கு 10லீற்றர் ம.எண்ணை விநியோகம்

புலோலிப் பகுதி விவசாயிகளுக்கு தலா 10 லீற்றர் மண்ணெண்ணெய் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதி விவசாயிகள் இனைக்குழு மூலம் சங்கத்துக்கு விண்ணப்பித்து 10 லீற்றர் மண்ணெண்ணெயைப் பெற்று வருகிறார்கள்.

இது தவிர புலோலி பல நோ. கூ சங்கம் இப்பகுதி பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் வீதமும் வழங்கி வருகிறது.

இச் சங்கத்தினால் வழங்கப்படும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 26 ரூபாவாகும். 10

## தொழில்நுட்ப மாணவிகள் ஆஸ்பத்திரியில் இரத்ததானம்

யாழ். பெரியாஸ்பத்திரி இரத்தவங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தம் பற்றாக்குறையை நீக்குவதற்காக பல யுவதிகள் நேற்று முன்வந்து இரத்த வங்கியில் இரத்ததானம் செய்துள்ளனர்.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த 15 மாணவிகளே இரத்த தானம் செய்தவர்களாவர்.

மேலும் பல யுவதிகள் முன் வந்தவர்களாயினும் அவர்களிடமிருந்து பிறிதொரு தினத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

—04 ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழை பகுதி நோக்கி பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்

தெல்லிப்பழை பகுதியை நோக்கி பலாலி இராணுவ முகாம் படையினர் நேற்று முற்பகல் வேளை 11 மணியளவில் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்

தெல்லிப்பழை சித்தியம் புளியடி பகுதியிலேயே 15க்கு மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன.

பனை மரத்தில் சீவல் தொழில் புரிந்து கொண்டு இறங்குகையில் ஒரு ஷெல் வீழ்ந்து வெடித்ததில் சீவல் தொழிலாளியான அதே இடத்தைச் சேர்ந்தவரான வேலன் கந்தசாமி (39) என்பவர் படுகாயமடைந்த யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு 10 மணிக்கு மேல் படையினரால் கடும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன இதனால் பனை மரங்கள் முறிந்தன. 07

## கொழும்பு-வவுனியா தபாலசேவை பகல்ரயிலிலேயே நடைபெறுகிறது

கொழும்பு - வவுனியா தபால் சேவை தற்போது பகல் ரயில் சேவையிலேயே நடைபெற்று வருகின்றது.

முன்னர் இச்சேவை இரவு ரயில் சேவை மூலம் நடைபெற்று வந்தது.

இதனால் கொழும்பிலிருந்து காலை வவுனியாவுக்கு புறப்படும் ரயிலில் வவுனியாவுக்கான தபால் பொதிகளும் வவுனியாவிலிருந்து நண்பகல் கொழும்பு செல்லும் ரயிலில் கொழும்புக்கான தபால் பொதிகளும் அனுப்பிவைக்கப்படுகின்றன. 10

## வத்தராயன் அகதி முகாமிலிருந்து பல மக்கள் இடம்பெயர்வு

வடமராட்சி கிழக்கு வத்தராயன் அகதி முகாமில் தங்கியிருந்த நூற்றுக்கணக்கான அகதிகள் நேற்று முன்தினம் அகதி முகாமை விட்டு இடம் பெயர்ந்து செம்பியன் பற்று பகுதியில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் இப்பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதினால் மக்கள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## குடாநாட்டில் விமானங்கள் அடிக்கடி பறந்தன

நேற்று யாழ் குடாப்பகுதி வான்பரப்பில் ஹெலிகொப்டர் குண்டு வீச்சு விமானங்களின் நடமாட்டம் அதிகரித்திருந்தது.

அநேகமாக வடமராட்சி கிழக்கு பகுதிகடலோரப்பகுதிகளிலே வான் நடவடிக்கைகள் அமைந்திருந்தன, 07

## பனை முறிந்ததில் நுங்கு பொறுக்கியவர் பலி

வடமராட்சிப் பகுதியில் கடந்த வாரம் வீசிய கடுங்காற்றுக்கு பனைமரம் ஒன்று முறிந்ததில் புலோலியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் மரணமானார்

புலோலி தெற்கைச்சேர்ந்த சு. நாகமணி (72) என்பவரே இவ்வாறு மரணமானவராகும்

பனங்காணி ஒன்றுக்குள் நுங்கு பொறுக்கிக் கொண்டிருந்த இவர் மீது காற்றினால் பனைமரம் ஒன்று வீழ்ந்து மரணமானார் 10

## ● புதிய இஸ்ரேல் பிரதமர் ராபின் அறிவிப்பு பாலஸ்தீனியர்க்கு சுயாட்சி வழங்கத் திட்டம்

"பாலஸ்தீனியர்களுக்கு பாலஸ்தீனம் என்ற தனிநாடு வழங்க முடியாது ஆனால் அவர்களுக்கு சுயாட்சி கொண்ட பிராந்திய அமைப்பை வழங்க திட்டமிட்டுள்ளேன்" இவ்வாறு இஸ்ரேலின் புதிய பிரதமராக அடுத்த மாதம் பதவி ஏற்கவுள்ள இட்சாக் ராபின் (70) தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இவர் பெரு வெற்றி கண்டது நினைவிருக்கலாம்

தமது தேர்தல் வெற்றிச் செய்தி கிடைத்ததை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் பிரசாரத்தில் அளித்த உறுதிமொழிபின்படி பாலஸ்தீன மக்களின் பிரச்சினையை தீர்க்க நான் உறுதி பூண்டுள்ளேன் மேற்காசிய அமைதி இன்று முக்கியமானது என்றார்

புதிய பிரதமர் ராபினின் இந்த நிலைப்பாடு குறித்து

—04 ஆம் பக்கம் பார்க்க

# பல அரிய நூல்கள் நூலக வாரத்தில் சேகரிப்பு!

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் கிராம சபை நூலக எழுச்சி வாரத்தை முன்னிட்டு மேற்கொண்ட சேகரிப்பின் போது 1700 நூல்களும், சுமார் 20 ஆயிரம் ரூபா பணமும் பொதுமக்களிடமிருந்து அன்பளிப்பாகக் கிடைத்துள்ளன.

அன்பளிப்பாகப் பொதுமக்களினால் வழங்கப்பட்ட நூல்களில் தற்போது எளிதில் பெற முடியாத தொல்காப்பியம், சிலப்பதிகாரம் நீதி நூல்கள், யாழ்ப்பாண வைபவ மாலை உள்ளிட்ட பல நூல்களும் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அப்பிரிவிலுள்ள 9 கிராம அலுவலர் பகுதிகளில் இவை சேகரிக்கப்பட்டன.

கச்சாய் பிரதேசசபை நூலகத்தில் கடந்த 10 ஆம் திகதியும், 22 ஆம் திகதியும் நூலக வாரத்தை முன்னிட்டு இரு வைபவங்கள் இடம்பெற்றன. சாவகச்சேரி விசேட ஆணையாளர் பு. சுந்தரம்பிள்ளை இவ்வைபவங்களில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

# 12 கோடிக்கும் அதிகமானோர் எய்ட்ஸினால் பாதிப்புறுவர்!

2000 ஆம் ஆண்டளவில் எய்ட்ஸ் நோய் சம்பந்தப்பட்ட வைரசுகளினால் ஒரு கோடி சிறுவர்கள் உட்பட 12 கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்படுவர் என்று சர்வதேச எய்ட்ஸ் நோய் தடுப்பு நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை எய்ட்ஸ் நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கை சுமார் 10 மடங்காக அதிகரிக்குமென ஆய்வாளர்கள் குழுக்கள் ஆய்வொன்றில் தெரிவித்துள்ளன.

தென்கிழக்காசியாவில் குறிப்பாக தாய்லாந்து, பர்மா, இந்தியா போன்ற நாடுகளில் எய்ட்ஸ் வேகமாகப் பரவி வருவதாகவும் அமெரிக்காவில் மட்டும் இந்த ஆண்டு 40 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரையிலானோர் இந்த நோயினால் பீடிக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பனம்பொருள் உற்பத்தி கணிசமான அளவு அதிகரிப்பு

பனம் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் 23 தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும், பனை அபிவிருத்திச் சபைஆகியன பனம் பொருள் உற்பத்தியில் கணிசமான அளவு அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளன.

1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 132 038 போத்தல்கள் பதனீரும், 1991ஆம் ஆண்டு காலப் பகுதியில் 2,954 905 போத்தல்கள் பதனீரும், 1992ஆம் ஆண்டு சித்திரை வரையான காலப் பகுதியில் 1,933, 481 போத்தல்கள் பதனீரும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1990 ஆம் ஆண்டில் 7, 476 போத்தல்கள் பனம் பாணியும், 1991 ஆம் ஆண்டில் 163, 334 போத்தல்கள் பனம் பாணியும், இவ் ஆண்டு சித்திரை வரையான காலப் பகுதியில் 191, 323 போத்தல்கள் பனம் பாணியும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

1990ஆம் ஆண்டு 3, 565 கிலோ பனம் வெல்லமும், 1991ஆம் ஆண்டு 97, 386 கிலோ பனம் வெல்லமும், இவ் ஆண்டு சித்திரை வரையான காலப் பகுதியில் 15, 475 கிலோ பனம் வெல்லமும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் புள்ளி விவரக்கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

# 10-வது ஆண்டு நிறைவுவிழா இரு தினங்கள் இடம்பெறும்

யாழ். மாவட்ட இக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டங்கள் இம்மாதம் 27ஆம் 28 ஆம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

27ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதல் நாள் நிகழ்ச்சிகளில் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்படப் பலர் கலந்து கொள்வர்.

28ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் இயக்க கல்விப் பொறுப்பாளர் யோகரட்ணம் யோகியும் பிற்பகல் நிகழ்ச்சிகளில் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் மற்றும் பலரும் கலந்துகொள்வர்.

# ராஜீவ் கொலை வழக்கில் 20 ஆயிரம் ஆவணங்கள்!

ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்குமென இந்திய விசேட புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது.

49 பேர் குற்றப்பத்திரிகைக்கு இணைவான 20 ஆயிரம் ஆவணங்கள் பிரதி பண்ணப்படுகின்றன என்றும். யூலை மாதத்தில் இவ்வேலை முடிந்து விடுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

# சம்பா அரிசியின் விலை 50 சதத்தினால் குறைப்பு!

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஒரு கிலோ சம்பா அரிசியின் மொத்த விலையை 50 சதத்தினால் குறைத்துள்ளது.

இதன்படி ஒருகிலோ சம்பா அரிசியின் விலை 19ரூபா 50 சதமாகும்.

# தனிநபர் அட்டைகள்

யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஊழியர்களினது நன்மை கருதி யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தினால் தனிநபர் அட்டைகள் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. 15

# பரிசளிப்பு விழா

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சு. மோகனதாஸ் அவர்கள் நிறுவுநர் நினைவுரையை நிகழ்த்துவார்.

பாடசாலை அதிபர் திரு. மு இராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் திருமதி இராசேஸ்வரி துரைராசா அவர்கள் பரிசுகளை வழங்கவுள்ளார். 25

# மானிப்பாயில் நாடக விழா

மானிப்பாய் இந்துக் கல்லூரி வருடாந்த நாடக விழா எதிர்வரும் ஜூலை 1, 2 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஜூலை 4 ஆம் திகதி கல்லூரி நிறுவுநர் தினம் கொண்டாடப்படுவதுடன் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியும் இடம்பெறவுள்ளது. (37)

## ஓவியர் பெனடிக்ற்

ஈழத்திருநாட்டிற்குப் புகழ் சேர்த்த ஓவியர் அமரர் பெனடிக்ற் அவர்களின் திருவுருவ ஓவியத்தை எதிர்வரும் யூலை 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் ஆதீனத்தில் திரை நீக்கம் செய்து வைக்கவுள்ளோம்.

அமரரின் ஆர்வலர்கள் மாணாக்கர்கள், உறவினர்களை எம்முடன் உடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

-மிக்கைல்
யாழ்ப்பாணம் 06062

# சந்தானத்தின் மறைவுக்கு இந்திய ஜனாதிபதி அனுதாபம்

தமிழ்நாடு விழுப்புரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் பலியான கல்லாகம் இராமநாதன் இசைக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் பிரபல கர்நாடக சங்கீத மேதையுமாகிய மகாராஜபுரம் சந்தானத்தின் (64) மறைவுக்கு இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் அனுதாபம் தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

'கர்நாடக இசைவல்லுநர் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயரின் புதல்வரான இவர் மிகவும் இனிய குரலில் பாடுவதில் வல்லவர், இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் ஏராளமான ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர், தனிப்பட்ட முறையிலும் அவர் எனக்கு நண்பர்' என அந்த அனுதாப அறிக்கையில் இந்திய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சர் அஜித் குமார் பாஞ்சா, ஜேர்மனியிலிருந்து இவரது மறைவு குறித்து அனுதாபச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மகாராஷ்டிர மாநில ஆளுநர் சுப்பிரமணியம், பாரதிய ஜனதாக்கட்சியின் துணைத்தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி, கேரள மாநில ஆளுநர், கேரள முதலமைச்சர் உள்ளிட்ட இந்தியாவின் முக்கிய பல தலைவர்களும் இவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

'பத்மஸ்ரீ' 'சங்கீதகலாநிதி' ஆகிய விருதுகளைப் பெற்றுள்ள மகாராஜபுரம் சந்தானம் மருதானைமடத்தில் பணிபுரிந்த 5 வருடகால வேளையில் இலங்கையின் பல பகுதிகளிலும் இசைக்கச்சேரிகளை நடாத்தியுள்ளார்.

சந்தானத்தின் இறுதிக்கிரியைகள் நேற்றுக்காலை அவரது சொந்த ஊரில் நடைபெற்றன.

# செயலக ஜெனரேட்டர் மீண்டும் பழுதடைந்தது

யாழ் செயலக ஜெனரேட்டர் மீண்டும் பழுதடைந்து விட்டது இதனால் செயலகத்தின் முக்கிய கரும வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

செயலக இறப்பு-பிறப்பு பதிவாளர் அலுவலக தேடும் அறையும் இருளில் மூழ்கியிருப்பதால் பிறப்பத்தாட்சிப் படிவங்கள் வழங்கும் வேலையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஜெனரேட்டருக்கு அடிக்கடி கோளாறு ஏற்படுவதால் புதிய ஜெனரேட்டரை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு கூட்டுறப்படைத் தலைமையகம் அனுமதிவழங்க மறுத்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (47)

# சமையல்வாயு தட்டுப்பாட்டால் 'பெரும்புள்ளி'களுக்கும் பாதிப்பு!

கொழும்பில் சமையல் எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையடுத்து சமையல் எரிவாயுவை வெளிநாடுகளிலிருந்து அவசரமாகத் தருவிக்க அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

சிங்கப்பூரிலிருந்து 1500 தொன் சமையல் எரிவாயுவை ஏற்றிக்கொண்டு கப்பலொன்று கொழும்புத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காஸ் தட்டுப்பாடு காரணமாக கொழும்பில் பெரும் புள்ளிகளின் சமையல் அறைகளில் கூட பிரச்சினைகள் தலையெடுத்துள்ளன என சிங்களப் பத்திரிகையொன்று கிண்டலாக எழுதியுள்ளது.

# செப்டம்பர் இறுதிக்குள் ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படும்

செப்டம்பர் இறுதிக்குள் நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் இத்தகவலை நேற்று முன்தினம் தெரிவித்தார்.

# பொலிஸ் மா அதிபரின் பதவிக் காலம் நீடிப்பு!

பொலிஸ்மா அதிபர் ஏணஸ்ட் பெரேராவின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸ இந்தச் சேவை நீடிப்பைத் தனது அதிகாரங்களைப்பயன்படுத்தி வழங்கியுள்ளார்.


## சிறு விளம்பரம்

### சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சினை, நோய், தோஷம், கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது சாதகத்துடன் நேரில் வரவும் பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம் ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர் 06052

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

### செல்வி குமாரசாமி தர்சினா

(ஆசிரியை, தருமக்கேணி அ. த. க. பாடசாலை)

பிறப்பு 19. 06. 67 — அகால மறைவு 25. 06. 91

உனைப்பிரிந்து ஓடிவிட்டது ஓராண்டு
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
ஓடினாலும் உன் நினைவுகள் உதிராது

அரசினர் பாடசாலை,
தருமக்கேணி,
பளை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
06061

# பூஸாவில் கைதிகள் மோதல்!

## ஒருவர் பலி; 61 பேர் படுகாயம்

பூஸா தடுப்பு முகாமில் நேற்று முன்தினம் இரு கோஷ்டிகளுக்கிடையே பெரும் மோதல் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த மோதலில் இரு தரப்பிலும் 62 பேர் படுகாயமுற்றனர். இவர்கள் காலி, கராபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதலை நிறுத்த அங்கு காவற் கடமையிலிருந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் மேலும் தெரிக்கப்படுகிறது.

படுகாயமுற்றவர்களில் ஒருவர் பின்னர் இறந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பூஸா முகாமில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்ச் சந்தேக நபர்கள் எவரும் இந்த மோதலில் பாதிக்கப்படவில்லை எனப் பிரஸ்தாப தடுப்பு முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜே. வி. பி. சந்தேக நபர்கள் பலர் தற்போது பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## விவசாய டிப்ளோமா பெற்ற 17 பேருக்கும் நியமனம்

வவுனியா விவசாயக் கல்லூரியில் இவ்வருட விவசாய டிப்ளோமா கற்கை நெறியை முடித்து சித்தியடைந்த 17 மாணவர்களுக்கும் வேலை வழங்கப்படவுள்ளது.

வவுனியா உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

சித்தியடைந்த 17 மாணவர்களையும் அன்றைய தினம் அங்கு சமூகமளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டிகாலிவைத்தியசாலைகளுக்கும் கோபோல்ட் உபகரணங்கள்

புற்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கென மூன்று கோடி ரூபா செலவில் மூன்று 'கோபோல்ட்' கதிர்ச் சிகிச்சை உபகரணங்களை சுகாதார அமைச்சு தருவிக்கவுள்ளது.

இந்த ஒரு சாதனத்தைப் பயன்படுத்தி 90 நோயாளிகளுக்கு ஒரு நாளில் சிகிச்சையளிக்கமுடியும்.

இவற்றில் இரண்டு உபகரணங்கள் மகரகம புற்றுநோயாளர் வைத்தியசாலைக்கும், மற்றையது கண்டி வைத்தியசாலைக்கும் வழங்கப்படவுள்ளது.

மற்றுமொரு கோபோல்ட் சாதனம் அடுத்த ஆண்டு தருவிக்கப்பட்டு காலி வைத்தியசாலைக்கு வழங்கப்படவுள்ளது.

இத்தகைய ஒரு கருவியை இங்கு வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தொடர்ச்சியாக மறுப்புத் தெரிவித்து வந்த காரணத்தினால் பல வருடங்களுக்கு முன்னரேயே அமைக்கப்பட்ட தெல்லிப்பழை புற்றுநோயாளர் வைத்தியசாலை செயற்படமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## திறக்க முயற்சி!

சவுதி அரேபியத் தூதரகம் ஒன்றை கொழும்பில் திறப்பதற்கான முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

சமீபத்தில் சவூதி அரேபியா சென்றிருந்த அமைச்சர் அஸ்வர் சவுதி அதிகாரிகளுடன் இது குறித்துப் பேச்சு நடத்தினார்.

தற்பொழுது இந்தியாவிலுள்ள சவுதி தூதரகமே இலங்கையின் நலனையும் கவனிக்கிறது.

## கண்டெடுத்த 10 ரூபாவை ஒப்படைத்த சிறுவனுக்கு வீடு!

பாடசாலையில் கண்டெடுத்த 10 ரூபாவை அதிபரிடம் ஒப்படைத்த தென்பகுதிச் சிறுவன் ஒருவனுக்கு அவனது குடும்பம் குடியிருக்க வீடும், பணப் பரிசும், கல்வி கற்பதற்கான வசதிகளும் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ளன.

மடபாதை கனிஷ்ட வித்தியாலய மாணவனான சமன் குமார என்னும் இச் சிறுவனின் நேர்மையைப் பாராட்டியுள்ள ஜனாதிபதி அச் சிறுவன் கண்டெடுத்த 10 ரூபாவுடன் தானும் ஐயாயிரம் ரூபாவை அப் பாடசாலையின் நிதிக்கு வழங்கியுள்ளார். திருமதி பிரேமதாஸவும் அப் பாடசாலைக்கு 1000 ரூபாவை வழங்கினார். இப்படியாக அரை மணி நேரத்தில் 18,420 ரூபா அச் சிறுவனால் அப் பாடசாலைக்குச் சேர்ந்தது.

## குழாய்க்கிணறு அமைப்பு

சர்வோதயம் இரசாவின் தோட்டத்தில் வாழுகின்ற ஏழை மக்களுக்கு அண்மையில் குழாய்க் கிணறு ஒன்றை அமைத்து அம்மக்களின் பாவிப்புக்கு கொடுத்துள்ளது.

## ஏனைய கட்சிப் பிரமுகர்களை தமிழ்க்கட்சித் தலைவர்கள் சந்திப்பர்

கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்த ஏழு தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு எடுத்திருக்கும் நிலைப்பாடு பற்றி விளக்குவதற்காக ஏனைய அரசியற் கட்சிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இவர்கள் தமது நாலு அம்சத் தீர்வுத் திட்டம் பற்றி இச் சந்திப்பின்போது விளக்கமளிப்பர்.

ஏற்கனவே கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களை தமிழ்க்கட்சித் தலைவர்கள் சந்தித்து அவர்களுடன் இது குறித்து பேச்சு நடத்தியுள்ளதாகவும் அச் செய்தி தெரிவிக்கிறது.

## சுங்க வரி சலுகை

வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் இந்தியா திரும்பும்போது கொண்டுவரும் பொருள்களுக்குச் சுங்க வரிச் சலுகை வழங்கப்படவுள்ளது.

## வங்கியின் தரம் உயர்கிறது

உலகின் மிகப்பெரிய வங்கிகளில் ஒன்று என்ற நிலைக்கு 'ஹொங் ஹொங் வங்கி' உயர்ந்துள்ளது.

இங்கிலாந்தில் உள்ள 'மிட்லண்ட் வங்கி' சுவீகரிக்கப்படுவதையடுத்தே இந்த நிலைக்கு ஹொங்ஹொங் வங்கி உயர்ந்துள்ளது. தற்பொழுது ஹொங்ஹொங் வங்கியின் கிளையொன்று கொழும்பில் செயற்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## போலிச் சான்றிதழ் தயாரித்த அச்சகம் கண்டுபிடிப்பு!

போலிக் கல்வித் தராதரப் பத்திரங்கள், பிறப்பு இறப்பு திருமண அத்தாட்சிப் பத்திரங்கள், அடையாள அட்டைகள் ஆகியவற்றை அச்சிடுவதற்காக பயன்படுத்தப்பட்டு வந்ததாகக் கூறப்படும் அச்சகமொன்று களனியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த அச்சகத்தின் உரிமையாளர் உட்பட மூவர் தற்பொழுது பொலிஸாரினால் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

## சென் றோக் வெற்றி பெற்றது

ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம், மாவீரர்கள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காகக் குமரன் விளையாட்டு மைதானத்தில் நடாத்திவரும் ஏழு வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் குருநகர் சென் றோக் விளையாட்டுக் கழகம் அதனை எதிர்த்தாடிய கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தை 3: 1 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது. (16)

## யாழ். ஆசிரியர்களுக்கு 6 மாத முற்பணம் கிடைக்கும்

யாழ். பிரதேசக் கல்விப் பணிமனையில் பணிபுரியும் ஊழியர்களுக்கும், பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் 6 மாத, 2 வருட முற்பணக் கடன்களை வழங்க யாழ் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக அறியப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சிடமிருந்து நிதியை அனுப்பி வைக்குமாறு கோரி யாழ் கல்வித் திணைக்களம் அதன் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (15)

## 1995 பாதகமான ஆண்டு இலங்கை இறைமையை இழக்கலாம்

- சிங்கள ஜோசியர்

ஜோதிடம் என்பது ஜோசியக் கருத்துச் சொல்பவர்களின் கணிப்புகளே. ஜோதிடக் கணிப்புகள் பல சரியாகவும் பல பிழையாகவும் காணப்பட்டுள்ளன.

ஜோசியத்தை பலமாகமாக விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்ப்பவர்களே அதிகம் எனினும், ஆதரவுக்கும் எதிர்ப்புக்கும் அதீத நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் மத்தியிலும் ஜோதிடக் கணிப்பீடுகள் கூறப்பட்டுத்தான் வருகின்றன.

அப்படியான கணிப்பீடு ஒன்று அண்மையில் கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

தொழில் முறையாக ஜோசியம் பார்க்காத ஆனால் ஜோசியத்தில் அதிக அக்கறையுள்ள ஒருவர் இலங்கையின் எதிர்காலம் பற்றிக் கூறிய கருத்து; அதைக் கேட்ட இன்னொருவரால் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஜோசியரின் பல கருத்துக்கள் தம்மைப் பொறுத்தவரை சரியெனக் காணப்பட்டதாலேயே இந்தக் கருத்தை தாம் பகிரங்கப்படுத்துவதாக இதை எழுதிய மேத்தானந்த விஜயகுல சூரிய என்பவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட ஜோசியர் செய்த கணிப்புகளின்படி இன்னும் மூன்று வருடங்களுக்குப் பின், அதாவது 1995 இல் இருக்கக்கூடிய கிரக நிலைகள் சுமார் 180 வருடங்களுக்கு முன்பு அதாவது 1815 ஆம் ஆண்டில் இருந்த அதே கிரக நிலைக்கு சமமானதாக காணப்படுகிறது.

1815 ஆம் ஆண்டிலேயே தனது இறைமையை இலங்கை இழந்தது எனவே 1995 ஆம் ஆண்டு இலங்கைக்கு மிகவும் பாதகமான ஆண்டாக காணப்படுவதால் மீண்டும் பிறநாட்டு ஆட்சியின் கீழ் இலங்கை வரக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

சில ஓலை வாக்கியங்களில் இலங்கை மஞ்சள் நிறத்தவரின் ஆட்சியின் கீழ் வரும் என எழுதப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ள இவர் சிறிலங்காவின் பொருளாதார, அரசியல் யதார்த்தங்கள் இதற்கு ஆதரவாகவே உள்ளதாகவும் குறிப்பிடுகிறார்.

முழுமையாக புதியதொரு கொழும்பு நகரை உருவாக்கும் திட்டம் பல வர்த்தக நிறுவனங்களை தூர கிழக்கு நாடுகள் கொள்வனவு செய்தல் போன்ற விடயங்களைப் பார்க்கும்போதும் இது சாத்தியமானதாகவிருக்கும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானிய உதவிகளும் திட்டங்களும் இவற்றிற்கான தாக்கப் பின்னங்களை கொண்டிருக்காமல் இருக்க முடியாது எனவும் கூறப்பட்டிருக்கிறது.

## அமைச்சரின் அறிவிப்பை தேர்தல்திணைக்களம்புறக்கணித்தது

வாக்காளர் இடாப்பில் தங்கள் பெயர்களை பதிந்து கொள்ளும் இந்திய வம்சாவளி மக்கள் பிரஜா உரிமைச் சான்றிதழை அல்லது அதற்கொத்த வேறு ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டுமென தேர்தல் ஆணையாளர் திணைக்களம் நேற்று அறிவித்தது.

நாடற்றவர் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதனால் இலங்கையில் உள்ள இந்திய மக்கள் அனைவரும் இந்த நாட்டுப் பிரஜைகளே எனவும் இதனால் வாக்காளர் இடாப்பில் தம்மைப் பதிந்து கொள்ள அவர்கள் பிரஜா உரிமைச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை எனவும் அமைச்சர் தொண்டமான் நேற்று முன்தினம் அறிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நசுக்கக் கோரியவர்கள் - இன்று மனித உரிமை பற்றிப் பேசுகிறார்கள்

-ஜனாதிபதி

நாடு அச்சத்தின் பிடியில் அகப்பட்டிருந்த வேளையில் அரசாங்கம் தென்பகுதி பயங்கரவாதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறிய எதிர்க்கட்சியினர் இன்று பயங்கரவாதத்தை ஒழிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மிகவும் கொடூரமானவை எனக் கண்டிக்கிறார்கள் என ஜனாதிபதி பிரேமதாச வுத்தள கம்உதாவ கண்காட்சித் திடலில் உரையாற்றுகையில் கூறினார்.

நாட்டின் தென் பகுதியில் பயங்கரவாதம் தலை தூக்கியிருந்த வேளையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் என்னைச் சந்தித்து அவசரகாலச் சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து நாசகாரச் சக்திகளை ஒழிக்குமாறு வற்புறுத்தினர். இப்பொழுது அதே தலைவர்கள் நாம் எடுத்த நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றனர், மனித உரிமை பற்றிப் பேசுகின்றனர் எனவும் ஜனாதிபதி அங்கு கூறினார்.

## இடைக்காலத் தீர்ப்பு இதுவரை அமுலாகவில்லை!

காவிரி நீர் தொடர்பான நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை உடனடியாக செயற்படுத்துமாறு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வி. கே. இராமமூர்த்தி இந்தியப் பிரதமரைக் கோரியுள்ளார்.

இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டு ஒரு வருடமாகிவிட்ட போதிலும் தமிழ் நாட்டுக்கு காவிரி நீர் இன்னமும் வழங்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு
# மலாயன் இலங்கையர் சங்கம் நன்கொடை

யாழ். ஜும்மா மசூதி வீதியிலுள்ள மலாயன் இலங்கையர் சங்கத்தின் காணியையும் கட்டடங்களையும் யாழ் பல்கலைக்கழக அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் உதவும் பொருட்டு நன்கொடையாக வழங்குவதென சங்கத்தின் காப்பாளர்கள் முடிவு செய்த தற்கினங்க மேற்படி சொத்துக்கள் யாவும் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களிடம் கடந்த புதன்கிழமை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

சுமார் 3 மில்லியன் ரூபா பெறுமதி மிக்க இச் சொத்துக்களை நன்றியுடன்பொறுப் பேற்ற உபவேந்தர், பல்கலைக் கழகம் அதற்குத் தேவையான நிதி வளங்களை பெறுவதற்கு அரசாங்கத்தில் மாத்திரம் தங்கியிராது பொது நிறுவனங்கள் நலன் விரும்பிகளிடமிருந்து பெறவேண்டிய கால கட்டத்தில் உள்ளதைச் சுட்டிக்காட்டி மலாயன் இலங்கைச் சங்கம் இவ்வாறான நடவடிக்கைகளிற்கு முன் மாதிரியாகத் திகழ்ந்துள்ளதை வரவேற்றுள்ளார்.

இச் சொத்துக்கள் தகுந்த முறையில் பல்கலைக்கழகத்தினால் நிர்வகிக்கப்படும் என அவர் சங்கத்திற்கு உறுதியளித்தார்.

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களில் ஒருவர் மட்டுமே வடம. கிழக்கிற்கு

யாழ் மாவட்டத்துக்கு புதிதாக இம் மாதம் முதல் இடமாற்றம் பெற்றுவந்த 60 ஆசிரியர்களில் 12 ஆசிரியர்கள் வடமராட்சி கோட்டப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்

இவர்களில் ஒரேயொருவர் மட்டுமே வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள நாகர் கோவில் மகாவித்தியாலயத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்

இம் மாதம் முதல் யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட 60 ஆசிரியர்களும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டவர்களாவர் 10

## சுற்றாடல் தினப் பிரகடனம் செயலகத்தில் ஆலோசனை

யாழ். மாவட்ட சுற்றாடல் சம்பந்தமான விசேட கூட்டம் ஒன்று நேற்று யாழ் செயலகத்தில் அரச அதிபர் க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

யாழ் மாவட்டத்தில் சுற்றாடல் தினத்தை மிக விரைவில் பிரகடனப்படுத்தி சுற்றாடலை பாதுகாத்தல் சம்பந்தமாக கிராம மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் சுற்றாடலை பாதுகாப்பது சம்பந்தமாகவும் இப்பகுதியில் உபகுழுக்களை அமைப்பது எனவும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. 47

## கப்பல் சேவை மட்டுப்படுத்தலால் வடபகுதி தபால் சேவை பாதிப்பு

வடபகுதிக்கான வெளியூர் தபால்கள் கொழும்பு பிரதான தபாலகத்தில் தேங்கி கிடப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தற்போது யாழ்ப்பாணத்துக்கான கப்பல் சேவை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் கொழும்பில் இருந்து தபால் பொதிகள் எடுத்து வருவதும் பாதிக்கப்பட்டுள்ளது 47

### படையினரின்...

யினர் பவள் கவசவாகனம் சகிதம் வரமுயன்ற போது புலிகளின் மற்றுமோர் அணி அவர்கள் மீது தாக்குதலை தொடுக்கவே படையினர் தமது முயற்சியை கைவிட்டுத் திரும்பினர்.

### வத்தராயன்...

பீதியடைந்து அகதி முகாமை விட்டு வெளியேறி சென்றிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் இருந்தும் கடற்படையினர் இப்பகுதியினை நோக்கி தொடர்ச்சியான பீரங்கி தாக்குதலையும் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது 47

### பாலஸ்தீனியர்க்கு

பாலஸ்தீன விடுதலை இயக்கம் உட்பட பல அரபுநாடுகளும் அமெரிக்காவும் வரவேற்றுள்ளன

இதனிடையே தேர்தலில் தோல்வியடைந்த முன்னாள் பிரதமர் இட்சாக் ஷாமீர் எனது அரசியல் வாழ்வுக்கு முடிந்து விட்டதாகவே கருதுகிறேன் எனக்குறிப்பிட்டார்

1969 இற்கு பின் இஸ்ரேலின் லிக்குட் கட்சி எதிர்க்கட்சியான தொழிற்கட்சியிடம் தோல்வியடைந்தது இதுவே மூன்றாவது தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

### ஈச்சமோட்டை வெற்றி பெற்றது

கிறிஸ்துவுக்காக இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் 6 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணி, அதனை எதிர்த்தாடிய சென்மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை 28 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. (16)

### மெதடிஸ் தினம்

பருத்தித்துறை - கட்டைவேலி சேகர மெதடிஸ்த திருச்சபையினால் மெதடிஸ்த தினம் இம்மாதம் 29 ஆம் திகதி திங்க கிழமை கொண்டாடப்படவுள்ளது. 10

### விவசாயம் பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெயை தொடர்ந்து வியாபாரிகள் பதுக்கினால் விவசாயம் பாதிக்கப்படும் அபாயம் தோன்றியிருப்பதாக விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 47

### தொழில் நுட்ப...

தொடர்ந்து இரத்ததானம் செய்ய விரும்புவோர்கள் இரத்த வங்கியினருடன் தொடர்பு கொள்ளும்படி இரத்தவங்கியினர் அறிவித்துள்ளனர் 07

### வீரச்சாவு

சிங்கபுர முகாமருகில் நடைபெற்ற தாக்குதலில் அற்புதன் (ஸ். உதயகுமார் வேலணை வெளி) வீரச்சாவு எய்தினார்.

### தார் தருவிக்க நடவடிக்கை

குடாநாட்டில் பழுதடைந்துள்ள முக்கிய வீதிகள் வெகு விரைவில் திருத்தப்படவுள்ளன. இதற்கெனச் சுமார் 20 பீப்பா தார் யாழ் குடாநாட்டிற்கு அனுப்பிவைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

### சம்மேளனப் போட்டிகள்

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் பேச்சு, கட்டுரை, பொது அறிவுப்போட்டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகள் அடுத்தமாதம் 19 ஆம் திகதி காலை 9 மணிமுதல் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் விண்ணப்ப முடிவு திகதி அடுத்தமாதம் 12 ஆம் திகதியாகும்.

இப் போட்டிகள் ஆரம்ப, பாலர், கீழ், மத்திய என்னும் நான்கு பிரிவுகளாக நடைபெறுமெனச் சம்மேளனத் தலைவர் இ. தவகோபால் தெரிவித்தார். 16

### நல்லூர் லயன்ஸ் அபிவிருத்தி

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் இவ்வாண்டு திட்ட நடவடிக்கையில் முதலாவதாக செம்மணி மயானம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக மேற்படி கழகம் தெரிவித்துள்ளது

## போதைப்பொருள் எதிர்ப்புத் தினம்

வட பிரதேச நற்கொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புத்தினம்இன்றுமாலை 3 மணியளவில் தெல்லிப்பழையில் உள்ள சம்மேளன பணிமனையில் நடைபெறும்

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ உட்பட பேரறிஞர்கள் பலர் உரையாற்றுவார்கள்

பட்டிமண்டபம், பாட்டு நடனம், நாடகம் முதலான கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும் 18

## கோப்பாயில் அஞ்சலி

ஆனையிறவு கட்டைக்காடுப் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி அன்று நடைபெற்ற மோதலில் காயம் அடைந்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த பொழுது புகழ் அரசன் (பொன்னையா சுதர்சன் கோப்பாய் - வடக்கு) என்ற போராளி நேற்று வீரச்சாவு எய்தினார்.

இவரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று மாலை 3, 00 முதல் 4 மணி வரை கோப்பாய் வடக்கு சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டம் நடைபெற்ற பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

## வரவு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் 'வரவு' சஞ்சிகையின் இரண்டாவதுமலர் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9. 30 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது

## தடா சட்டத்தை கைவிட அமெரிக்க காங்கிரஸில் தீர்மானம்
### - எனினும் சபை நிராகரிப்பு

இந்தியா அந்நாட்டிலுள்ள தடா சட்டம் உட்பட ஐந்து தடைச் சட்டங்களை கைவிடாவிட்டால் அமெரிக்கா இந்தியாவிற்கான அபிவிருத்தி நிதியை வழங்கமாட்டாது என்ற தடையை கொண்டுவரப்பட வேண்டும் என அமெரிக்க காங்கிரஸில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போதிலும் அது பின்னர் கைவிடப்பட்டது.

குடியரசுக் கட்சி உறுப்பினர் போதும் இந்தத் தீர்மானத்தை பிரேரித்தார். எனினும் காங்கிரஸ் குழு நேற்றுக் கூடி இத்தீர்மானத்தை நிராகரிப்பது என முடிவு எடுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஆசிய பசுபிக் விவகாரத்திற்கு பொறுப்பான பெர்பல் சோலர்ஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

## போதைக்கு அடிமை

சீனாவில் போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளை அதிகரிக்க சீனா திட்டமிட்டுள்ளது

கடந்த வருடம் சீனாவில் ஒன்றரை லட்சம் பேர்போதை பொருள் பாவனைக்கு அடிமையாகினர் இருவருடங்களுக்கு முன் இந்த தொகையை விட இது 2 மடங்காகும்.

## இந்தோனேஷிய பஸ் விபத்து பாடசாலை சிறுவர்கள் பலி

இந்தோனேஷியாவில் பாடசாலை சிறுவர்களும் ஆசிரியர்களும் பயணம் செய்த பஸ் பாலம் ஒன்றிலிருந்து கவிழ்ந்து வீழ்ந்ததில் 15 பேர் பலியாகினர்.

விடுமுறைக்கு சுற்றுப்பயணம் செய்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த பாடசாலை சிறுவர்களுக்கே இந்த அவலம் ஏற்பட்டது.

பாலத்தின் மீது பஸ் அதிவேகமாக பயணம் செய்ததாகவும் வேகத்தினால் சாரதி நிதானம் இழந்துவிட்ட நிலையில் பஸ் பாலத்திலிருந்து கீழே பள்ளத்தாக்கில் பாய்ந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

## இந்திய ஜனாதிபதி தேர்தல்
## 4 வேட்பாளர்கள் களத்தில்

எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்திய ஜனாதிபதி தேர்தலில் நான்கு வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்

இத்தேர்தலில் போட்டியிட 42 வேட்பாளர்கள் வேட்பு மனுதாக்கல் செய்தனர். எனினும் தேர்தல் அதிகாரிகள் நேற்று பரிசீலனையின் பின் 38 வேட்பு மனுக்கள் நிராகரித்தனர்.

இப்போது களத்தில் உள்ளவர்கள் சங்கர் தயாள் சர்மா, பேராசிரியர் ஜி ஜி ஸ்வெல், ராம்ஜெத்மலானி, ஜெவீந்தர் சிங் ஆகிய நால்வருமாகும்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிரைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லக்ஷ்மி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 26-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது